**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 327/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 25.11.2025.**

| Name : குழந்தைவேல் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1 என் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். எதிரியை எனக்கு தெரியும். கடந்த 30.10.2022 ம் தேதியன்று மாலை 3 மணிக்கு தனசேகர் நிலத்தில் கடப்பாறையால் அவர் இடத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தார். ராஜேஷ் என்பவர் சுத்தம் செய்வதை தடுத்தார். எதிரி அ.சா.1 யை கடப்பாறையால் வயிற்றில் அடித்தார். இதனால் அவருக்கு ஜென்னி ஏற்பட்டது. அ.சா.1 ன் மனைவி கோமதி எதிரியை தடுத்த போது ராஜேஷ் என்பவர் கோமதியின் நெஞ்சில் கை வைத்து கீழே தள்ளிவிட்டார். இதனால் கோமதிக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டது. பிறகு 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அ.சா.1, 2 யை அனுப்பி வைத்தோம். நான் என் வீட்டிற்கு சென்ற போது சத்தம் கேட்டு செல்வதற்குள் சம்பவம் நடந்தது. சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநராக வேலை செய்கிறேன் என்றால் ஆமாம். எனக்கு எப்போதும் இரவு பணி என்றால் ஆமாம். விடுமுறை எனக்கு எப்போது என்றால் மாறி மாறி அளிப்பார். ஒப்பந்தகாரர் யார் என்றால்

கலை டிராவல்ஸ் ஆகும். அ.சா.1 மற்றும் 2 ஆகியோர் வீடும் என் வீடும் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 50 அடி தூரத்தில் உள்ளது. எந்த திசையில் உள்ளது என்றால் எங்கள் வீடு வடக்குபக்கம் தெற்கு வாசல் அவர்கள் வீடு கிழக்கு வாசல் ஆகும். அ.சா.1 எனக்கு உறவினர் என்றால் ஆமாம்.

3) அந்த பகுதியில் சுமார் 10 வீடுகள் உள்ளது. வீட்டிற்கு மளிகை சாமான் வாங்க கடைக்கு சென்றுவிட்டு நான் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். மளிகை சாமான் வாங்க சென்ற நேரம் என்னவென்றால் 2.30 மணியிருக்கும். வீட்டிலிருந்து நான் நடந்து சென்றேன். நான் மட்டும் தான் சென்றேன். நான் கடைக்கு சென்ற போது கூட்டமாக இருந்ததா என்றால் இல்லை. அந்த இடத்தில் யாரும் எந்த வேலையும் செய்யவில்லை.

4) என்னென்ன சாமான் வாங்கினேன் என்றால் அரிசி, பருப்பு மளிகை சாமான் வாங்கினேன். 10, 15 கிலோ அளவிற்கு மளிகை பொருட்களை வாங்கினேன். நான் கடையிலிருந்து 2.50க்கு திரும்ப கிளம்பினேன். கடைக்கும் என் வீட்டிற்கும் 250 அடி தூரம் இருக்கும். அந்த கடையில் கூட்டம் இருந்ததா என்றால் 1, 2 பேர் வாங்கி சென்றனர். நான் வீட்டிற்கு 3 மணிக்குள் சென்றுவிட்டேன். போகும் போது வாய் தகராறு இல்லையா என்றால் தகராறு நடந்து கொண்டிருந்தது.

5) 3 மணிக்கு வீட்டில் சாமானை வைத்து விட்டு சத்தம் அதிகமாகவே வெளியே வந்தேன். நான் சென்ற போது யார் யார் தகராறு செய்திருந்தார்கள் என்பதை கவனித்தேனா என்றால் ஆமாம். அந்த இடத்தில் எதிரி மற்றும் அ.சா.1 ,2 யை தவிர வேறு யாராவது இருந்தார்களா என்றால் 4, 5 பேர் இருந்தார்கள் அவர்கள் விவரம் எனக்கு தெரியாது.

6) நான் முதலில் தகராறை கண்டு கொள்ளவில்லை என்றால் ஆமாம். பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிறகு சத்தம் அதிகமாகும் போது வந்து பார்த்த போது சம்பவம் நடந்தது. எதற்காக தகராறு என்று நான் கேட்டேனா என்றால் முதலில் கேட்கவில்லை பிறகு கேட்டேன். சம்பவயிடத்தில் நான் வரும் போது போது மற்றும் 5, 6 பேர் இருந்தார்கள்.

7) வாய்தகராறு தான் செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். அடிக்கும் பொருட்களை எங்கிருந்து எடுத்து வந்தார்கள் என்றால் வீட்டிற்கு பக்கத்தில் இருந்து தான் கொண்டு வந்தார்கள். எத்தனை அடி இருக்கும் என்றால் 6, 7 அடி இருக்கும். அகலம் எவ்வளவு என்றால் 1 1/2 இன்ச். அந்த பொருளை நான் பார்க்கவில்லை என்றால் ஆமாம். கடப்பாறையால் அடித்துவிட்டார் என்றால் ஆமாம். கடப்பாறை வேறு யார் மீதும் படவில்லை என்றால் ஆமாம்.

8) நான் 5 அடி தூரத்தில் இருந்து சம்பவத்தை பார்த்தேன். நான் விலக்கிவிட்டேனா என்றால் இரு நபர்களுக்கும் எனக்கும் மன வருத்தம் இருந்ததால் நான் விலக்கவில்லை. கடப்பாறையால் வயிற்றில் அடித்துவிட்டார். வேறு எந்த பொருளிலும் அடிக்கவில்லை என்றால் ஆமாம்.

9) வேறு யாரையாவது அடித்தார்களா என்றால் அ.சா.2 யை அடித்தார்கள். நெஞ்சு மீது அடித்து தள்ளிவிட்டார். கடப்பாறையால் அ.சா.2 யை அடிக்கவில்லை என்றால் வயிற்றின் மீது அடித்தார். காயம் ஏற்பட்டதா என்றால் நான் பார்க்கவில்லை. ஏற்கனவே அவருக்கு ஜன்னி வலிப்பு நோய் வருமா என்றால் வரும். நீதிமன்றத்தில் இரு தரப்பினருக்கும் இடையே சிவில் வழக்கு நடந்து வருகிறது. இன்னும் வழக்கு நடந்து வருகிறதா என்றால் அதற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை.

10) அ.சா.1 அடிக்கடி வலிப்பு வந்து கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்றும் எதிரிகள் அடிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடப்பாறையால் யார் யாரை அடித்தார்கள் என்றால் அ.சா.1, 2 யை அடித்தார்கள். நான் சம்பவயிடத்தில் இல்லாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy
Digitally signed by D.Myilswamy
Date: 2025.11.26 10:31:13 +0530

Judicial Magistrate No.II,
Mettur.